## தூய பர்த்தில்திஸ் அரசி

'ஆண்டவரின் அடியார்களே,அவரிடம் அன்புகொள்ளுங்கள்'

திபா 31 : 23

முதல் வாசகம்: ஏபிரேயர்11: 32 – 40

சகோதர சகோதரிகளே! இன்னும் கூறவேண்டுமா? கிதியோன், பாராக்கு, சிம்சோன், இப்தாகு தாவீது, சாமுவேல் ஆகியோர்பற்றியும், இறைவாக்கினர் பற்றியும் எடுத்துரைக்க எனக்கு நேரமில்லை.நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள்; நேர்மையாகச் செயல்பட்டார்கள்; கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள்; சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்;. தீயின் கொடுமையைத் தணித்தார்கள்; வாள் முனைக்குத் தப்பினார்கள்; வலுவற்றராயிருந்தும் வலிமை பெற்றார்கள்; போரில் வீரம் காட்டினார்கள்; மாற்றார் படைகளை முறியடித்தார்கள்.பெண்கள் இறந்த தம் உறவினரை உயிர்த்தெழுந்தவராய்ப் பெற்றுக்கொண்டார்கள். உயிர்த்தெழுந்து சிறப்புறும் பொருட்டு, சிலர் விடுதலை பெற மறுத்து வதையுண்டு மடிந்தனர்.வேறு சிலர் ஏளனங்களுக்கும் கசையடிகளுக்கும் ஆளாயினர்; விலங்கிடப்பட்டுச் சிறையில்கூட அடைக்கப்பட்டனர்.சிலர் கல்லெறிபட்டனர்; இரண்டாக அறுக்கப்பட்டனர்; வாளுக்கு இரையாகி மடிந்தனர்; செம்மறியின் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்துக்கொண்டு அலைந்து திரிந்தனர்; வறுமையுற்று வாடினர்; துன்புறுத்தப்பட்டனர்; கொடுமைக்கு உள்ளாயினர்.அவர்களை ஏற்க இவ்வுலகுக்குத் தகுதியில்லாமல் போயிற்று. மலைகளிலும் குகைகளிலும் நிலவெடிப்புகளிலும் பாலை வெளிகளிலும் அவர்கள் அலைந்து திரிந்தார்கள்.இவர்கள் அனைவரும் தம் நம்பிக்கையினாலே நற்சான்று பெற்றார்கள். ஆயினும் கடவுள் வாக்களித்ததை அவர்கள் பெறவில்லை.ஏனெனில், நம்மோடு இணைந்துதான் அவர்கள் நிறைவு பெற முடியும் என்பதைக் கடவுள் கருத்தில்கொண்டு நமக்காகச் சிறந்த திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்.

பதில்பாடல்: திருப்பாடல் 31: 20, 21, 22, 23, 24

ஆண்டவரை நம்புவோரே உங்கள் உள்ளம் உறுதி கொள்வதாக.

நற்செய்தி: மாற்கு5: 1 – 20

அக்காலத்தில் இயேசு சீடர்களுடன் கடலுக்கு அக்கரையிலிருந்த கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள்.இயேசு படகைவிட்டு இறங்கிய உடனே தீய ஆவி பிடித்த ஒருவர் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தார்.கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் ஒருபொழுதும் சங்கிலியால்கூடக் கட்டி வைக்க முடியவில்லை.ஏனெனில், அவரைப் பல முறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்து எறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை.அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்; தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார்.அவர் தொலையிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து அவரைப் பணிந்து,'இயேசுவே, உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம்' என்று உரத்த குரலில் கத்தினார்.ஏனெனில் இயேசு அவரிடம், 'தீய ஆவியே, இந்த மனிதரை விட்டுப் போ' என்று சொல்லியிருந்தார். அவர் அம்மனிதரிடம், 'உம் பெயர் என்ன?' என்று கேட்க அவர், 'என் பெயர் 'இலேகியோன் ', ஏனெனில் நாங்கள் பலர்' என்று சொல்லி,அந்தப் பகுதியிலிருந்து தங்களை அனுப்பிவிட வேண்டாமென்று அவரை வருந்தி வேண்டினார்.அங்கே மலைப்பகுதியில் பன்றிகள் பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன.'நாங்கள் அப்பன்றிகளுக்குள் புகும்படி எங்களை அங்கே அனுப்பிவிடும்' என்று தீய ஆவிகள் அவரை வேண்டின.அவரும் அவற்றுக்கு அனுமதி கொடுத்தார். பின் தீய ஆவிகள் வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகள் அடங்கிய அந்தக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது.பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களோ ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் இதை அறிவித்தார்கள். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் வந்தனர்.அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, பேய் பிடித்திருந்தவர், அதாவது இலேகியோன் பிடித்திருந்த அவர், ஆடையணிந்து அறிவுத் தெளிவுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அச்சமுற்றார்கள்.நடந்ததைப் பார்த்தவர்கள் பேய் பிடித்தவருக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டதை அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் பகுதியை விட்டுப் போய்விடுமாறு இயேசுவை வேண்டிக்கொண்டார்கள்.அவர் படகில் ஏறியதும் பேய் பிடித்திருந்தவர் தாமும் அவரோடு கூட இருக்க வேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்.ஆனால் அவர் அதற்கு இசையாமல், அவரைப் பார்த்து, 'உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்' என்றார்.அவர் சென்று, இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்பொலி நாட்டில் அறிவித்து வந்தார். அனைவரும் வியப்புற்றனர்.

தியானம் : இன்றைய நற்செய்தியில் 'இறை அதிகாரத்தோடு' தீய ஆவிக்குக் கட்டளையிடும் இறைமகன் இயேசுவைச் சந்திக்கின்றோம். அதிகாரம் எனப்படுவது ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள பதவியின் தன்மையைப் பொறுத்ததாகும். ஒருவர் விரும்புவதை அடுத்தவர் நிறைவேற்றக் கட்டளையிட்டுக் கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்வது ஆணவம்எனப்படும். எனவே இறைவார்த்தைக்கு எதிராக எம்மிடையே பரப்பப்படும் தீயபிரச்சாரங்கள் மட்டில்; திருமுழுக்கு வழியாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நாம் எவ்வாறு பயன்படுத்து கிறோமெனச் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். கப்பர்நாகூம் மக்கள் இறைமகன் இயேசுவை தச்சன் சூசையின் மகனெனக் கருதியிருக்கலாம். எனினும் அங்கிருந்த தீய ஆவி பிடித்தவர் 'இயேசுவே, உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை?' (மாற்கு5:7) என ஆண்டவர் இயேசுவின் வல்லமை நிறைந்த அதிகாரத்தை உணர்ந்தவராக பயந்து அங்கலாய்க்கின்றார். ஆண்டவர் இயேசு அந்த ஆவியைப்பார்த்து தமது வல்லமை நிறைந்த அதிகாரத்தோடு 'தீய ஆவியே, இந்த மனிதரை விட்டுப்போ' (மாற்கு5:8) என்று கட்டளையிட்டாரென நற்செய்தி தொடர்கின்றது. இதன்மூலம் இறைமகன் இயேசுவின் அதிகாரமும்இ வல்லமையும் பரலோக தகப்பனால் வழங்கப்படுள்ளதென நிரூபிக்கப்படுகின்றது. இறைமகன் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றுள்ள எமக்கும் இவ்வாறான வல்லமை பொருந்திய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்று எம்மிடையே கற்சிக்கும் சிங்கம்போல் செயற்படும் தீய ஆவியின் செயற்பாடுகளான 'ஒரு

பால் திருமணம்'இ'திருமண முறிவுகள்'இ 'கருச்சிதைவு' மற்றும்; அநாகரீகப் பழக்க வழக்கங்களால் தான்தோன்றித் தனமாக வாழுவதால் பெற்றோரைஇ மூத்தோரை மதிக்காது எமது கலாச்சாரத்தைச் சீரழித்தல் மட்டுமல்லஇ அன்னை மரியாளுக்கு எதிராகப் பரப்பப்படும் பல தப்பான பிரச்சாரங்களைக் குறித்து நாம் என்ன செய்கின்றோம்?. திருமுழுக்கால் கிறிஸ்துவின் உடலோடு இணைக்கப்பட்டுள்ள நாம் இவற்றை எதிர்த்து அதிகாரத்தோடு குரல் எழுப்ப அழைக்கப்பட்டுள்ளோம். எனவே வார்த்தை வழியாகவும்இ திருவிருந்து வழியாகவும் எம்மோடு உறவாடும் இறைமகன் இயேசுவை எமது ஆண்டவர் என நாம் அடையாளம் கண்டுள்ளோமா? அல்லது கெரசேனர் பகுதியில் அன்று வாழ்ந்தவர்களில் நாமும் ஒருவரா?